# MADURAI KAMARAJ UNIVERSITY

Palkalai Nagar, Madurai, Tamilnadu, India

## SRI SATHGURU SANGEETHA VIDYALAYAM

(College of Music and Research Centre)
(As per the Ph.D Regulations of Madurai Kamaraj University, Madurai)

**Mrs.V. BAVANI**
Research Scholar
(Registration No : P 3182)

Sri Sathguru Sangeetha Vidyalayam, College of Music and Research Centre will defend her Ph.D thesis through ONLINE (GOOGLE MEET) Viva Voce Examination on 07-07-2021 at 11AM (IST)

**Title of the Thesis**

“கூத்தநூல் மற்றும் பஞ்சமரபில் காணப்படும் ஆடற்கூறுகள் ஓர் ஒப்பீடு”

**Research Supervisor and Convener**

**Dr. V.BALA, M.Music, Ph.D**
Principal (Retd),
Sri Sathguru Sangeetha Vidyalayam,
College of Music and Research centre,
Tallakulam,Madurai-625002.

**External Examiner**

**Dr.S.N.SUSHEELA , Ph.D,**
Professor of Music,
Department of Performing Arts,
Banglore University,
Banglore-560056.

Link to join the Viva Voce Session

https://meet.google.com/dby-grzn-xdn

Faculty members, Research Scholars and Students are cordially invited to take part in the online Viva Voce session

## SRI SATHGURU SANGEETHA VIDYALAYAM

(College of Music and Research Centre)

### TECHNICAL INFORMATION

- We will join the live session through Google Meet platform.
- For those of you who would access the meet with Google Chrome please use the link https://meet.google.com/dby-grzn-xdn
- Those who would use mobile devices ,install Google Meet from the playstore and enter the following Meeting ID (dby-grzn-xdn) when prompted.
- Session will start at 11:00AM(IST).However, it is advised to join 15 minutes earlier to avoid any technical glitches.

### GENERAL INSTRUCTIONS

- Please leave your Name and Institution name in the Live Chat section during the session.
- Kindly make sure that you have MUTED your microphones turned off your VIDEO during the session.
- Please do not use Screen sharing option at any point of time of the session.
- Please avoid unnecessary interference while the candidate presents.
- As the candidate goes on with the presentation, you can send your queries in the chat box only.
- Participants are requested to maintain the decorum throughout the session.

# கூத்தநூல் மற்றும் பஞ்சமரபில் காணப்படும் ஆடற்கூறுகள் - ஓர் ஒப்பீடு

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில்
இசையில் முனைவர் பட்டத்திற்காக
அளிக்கப்பெறும் ஆய்வுச்சுருக்கம்

பதிவுஎண்: **P3182**

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மதுரை

சூலை - 2021

ஆய்வாளர் பெயர் : **V.**பவானி

பதிவு எண் : **P3182**

ஆய்வுத்தலைப்பு : "கூத்தநூல் மற்றும் பஞ்சமரபில் காணப்படும் ஆடற்கூறுகள் ஓர் ஒப்பீடு"

நெறியாளர் : முனைவர். **V.**பாலா **M.Music,Ph.D,**

முதல்வர் (பணி நிறைவு),

ஸ்ரீ ஸத்குரு சங்கீத வித்யாலயம்,

இசைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம்.

தல்லாகுளம்,

மதுரை.

ஆய்வு மையம்: ஸ்ரீ ஸத்குரு சங்கீத வித்யாலயம் ,

இசைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம்,

தல்லாகுளம்,

மதுரை.

# கூத்தநூல் மற்றும் பஞ்சமரபில் காணப்படும் ஆடற்கூறுகள் ஓர் ஒப்பீடு

## முன்னுரை:

பாரத திருநாட்டின் கலாச்சார நடனவகைகளில் சிறப்பானதாக வலம் வந்து கொண்டிருக்கும் கலை பரதநாட்டியம். ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களின் வரிசையில் ஐந்தாவது வேதம் என பெயர் பெற்ற கலை நாட்டியக்கலை. இக்கலை உலகம் தோன்றி பரிணாம வளர்ச்சி பெற்ற நாள்முதல், மக்களிடையே தோன்றி, மக்களுடன் சேர்ந்து வளர்ந்து உன்னத நிலையை அடைந்துள்ளது. முதலில் பொழுதுபோக்கு விளையாட்டாக, மக்களால் விளையாடப்பட்டு கூத்து என்றாகி பின் அதற்கென ஒரு வரைமுறைப்படுத்தப்பட்டதால் கூத்துக்கலையாக மாறி மக்களால் ஆடப்பட்டு மக்களை மகிழ்விக்கின்ற ஒரு பாரம்பரியம் மிக்க கலையாக இது விளங்குகிறது.

ஆடற்கலை தெய்வத்துடன் தொடர்புடைய கலை. தெய்வ வழிபாட்டுடன் வளர்ந்து தெய்வ ஆராதனைக்கான கலையாக பரிணமித்தது. இந்திய நாட்டின் பண்பாட்டினை விளக்கும் நாட்டியக்கலையின் சரித்திரத்தினை ஆராய்ந்துப் பார்த்தால், மதவழிபாடும் நாட்டியமும் ஒன்றுசேர்ந்தே காணப்படுகின்றது. நாட்டியக்கலை ஆற்றல் நிறைந்த கலையாகும். இந்தக்கலை காலந்தோறும் வளர்ந்து மாற்றம் பெற்றுள்ளது.

எந்த ஒரு நிகழ்வு மனிதனுக்கு மனமகிழ்ச்சியைத் தருகின்றதோ அதனை அம்மனிதன் மீண்டும் மீண்டும் கண்டுகளிக்க ஆவல் கொள்வதால் அந்நிகழ்வு பலமுறை காட்சிப்படுத்தப்படுவதால் அதுவே மக்களின் வாழ்க்கையோடு ஒன்றிவிடுகின்றது. அவ்வாறு மக்களோடு சோந்து வளர்ந்த ஒரு கலைதான் இன்று நாட்டியம் என்றழைக்கப்படும் கூத்தாகும். இக்கலை இறைவனிடம் இருந்து வந்தது என்று நம்பப்பட்டாலும், மனிதனால் ஒருவரில் இருந்து பலருக்கு கற்றுக்கொடுக்கப்பட்டு இக்கலையை அழியாமல் பாதுகாத்து வந்த பெருமை மனித இனத்தையே சாரும். வேதங்களிலும், புராணங்களிலும்,

இதிகாசங்களிலும் நாட்டியத்தைப்பற்றிய செய்திகள் நமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்த மனிதன் தன் அடையாளமான மொழி தோன்றுவதற்கு முன் தன் கைகளால், கண்களால், ஒருவருக்கொருவா் தகவல் பரிமாறிக்கொள்ள சைகையால் பேசிக்கொண்டனா். பறவை, மான், மீன், வானம், பூமி, நான், நீ, என ஒவ்வொரு உயிரினங்களையும் பேச்சே இல்லாத உலகத்தில் தன் அங்க அசைவினால் ஒருவருக்கொருவா் நடத்திக்காட்டிய ஊமை விளக்கமே இன்றைய நாட்டியத்தின அடிப்படைக் கரு ஆகும். மனிதனின் உள்ளத்தில் எழும் உணா்வு நிலைகள் பல்வேறு சுவைநிலைகளை அடைகின்றன. அவ்வுணா்ச்சி செயல்பாடுகளில் அந்தந்த சூழலுக்கு ஏற்ப சுவை வெளிப்பாடுகளை மனிதன் புலப்படுத்துகின்றான். மானிடன் தன் எதிரில் உள்ள மற்ற மானிடா்க்கு புரிந்து கொண்டு செயல்படும் விதத்தில் அவை நடைமுறைக்கு பழக்கவழக்கங்களாக அமைகின்றன.

மனிதன் தன் உள்ளத்து உணா்ச்சிகளில் ஏற்படும் சுவைகளை அப்பட்டமாக தன் எதிரே இருப்பவருக்கு தெரிவிக்கும்பட்சத்தில் அதனை எதிராளி புரிந்து கொண்டு தானும் அந்த உணா்ச்சி நிலைக்கு வெளிப்படுத்த உந்தப்படுகின்றான். மனிதன் பரிணாம வளா்ச்சி பெற்ற நிலையில் எழுத்தறிவினை வளா்த்துக்கொண்டபிறகு தனக்கு தெரிந்த அறிந்த நாட்டியத்தின் அடிப்படை கூறுகளை தனது சந்ததியினரும் தெரிந்து கொண்டு பயன்பெற வேண்டும் என்று ஆசைப்பட்டு தனக்கு தெரிந்த நாட்டியத்தின் அடிப்படைக் கூறுகளை ஏட்டில் குறித்து வைத்துச் சென்றுள்ளான்.

இவ்வாறு ஏட்டில் எழுதி வைக்கப்பட்ட நாட்டிய இலக்கணங்கள் காலப்போக்கில் மனிதன் பெற்ற விஞ்ஞான வளா்ச்சியின் காரணமாக காகித்தில் அச்சடிக்கப்பட்டு புத்தகங்களாக வெளிவரத்தொடங்கின. அந்த காலத்தில் வாழ்ந்த மனிதா்களும் இந்நூல்களை தமது கலைப்பொக்கிஷங்களாக நினைத்து பாதுகாத்து பயன்படுத்த தொடங்கினாா்கள்.

இவ்வாறாக சங்ககாலம் முதற்கொண்டு பயன்படுத்திய நூல்கள், மற்றும் மற்றைய தமிழ் நூல்களில் கூத்தைப்பற்றிய செய்திகள், நமக்கு நூல் ஆதாரத்துடன் கிடைத்திருக்கின்றன. காலம் செல்லச் செல்ல இக்கலையில் வல்லுனர்களாக மனிதன் தன்னை மாற்றிக்கொண்டதின் விளைவாக பிற்காலத்தில் நாட்டிய நூல்கள் பல பிறந்தன. பண்டைய நாகரீகங்களில் சிறப்பிடம் பெற்ற தமிழினமும் நாட்டியக்கலையில் சிறப்புமிக்க நாட்டிய முறைகளை கடைப்பிடித்திருந்தனர். பழமையான கோயில்களில் உள்ள ஓவியங்களும், சிற்பங்களுமே, இந்த உண்மைகளை நிரூபிக்கும் சான்றாக நம் கண்முன் நிற்கின்றன.

இன்று நம் நாட்டு மக்களால் போற்றி பராமரிக்கப்படும் முக்கிய கலையான நாட்டியத்தினைப்பற்றி வேதங்காலந்தொட்டும், இதிகாச காலம் மற்றும் சங்ககாலம் முதல் நாட்டியம் பற்றிய இலக்கண வரைமுறைகள் பல நூல்களில் காணப்படலாகின்றன.

அத்தகைய சங்ககாலத்தில் தோன்றிய நூல்களில் பழமை வாய்ந்த தமிழ்மொழியில் இயற்றப்பட்ட இரண்டு நூல்களை தேர்வு செய்து இந்நூல்களில் உள்ள நாட்டியக்கூறுகளை ஆராய்ந்து இந்த ஆய்வேடு உருவாக்கப்பட்டுள்ளது.

## ஆய்வுத் தலைப்பு:

**"கூத்தநூல் மற்றும் பஞ்சமரபில் காணப்படும் ஆடற்கூறுகள் ஓர் ஒப்பீடு"** என்ற தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வு முறை:

இந்த ஆய்வு நூலக ஆய்வாக அமைந்துள்ளது. சாத்தனார் இயற்றிய **கூத்தநூல்** (விளக்கவுரை-திரு. ச.து.சு. யோகியார்) மற்றும் அறிவானார் இயற்றிய **பஞ்சமரபு** (விளக்கவுரை - வித்வான் திரு.வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர்) ஆகிய இரு நூல்களும் இவ்வாய்விற்கு முதன்மை நூல்களாகும். பல நூல்களிலிருந்து ஆதாரங்களை சேகரித்து தொகுப்பாய்வாகவும், பகுப்பாய்வாகவும், ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ஆய்வு நோக்கம்:

தமிழர்களின் வாழ்க்கை முறைகளைப் பற்றிக் கூறும் தொல்காப்பியம் மற்றும் முத்தமிழ் காவியமான சிலப்பதிகாரத்தில் நடனம் பற்றிய அரிய செய்திகள் காணக் கிடக்கின்றன. தற்காலத்தில் நாட்டிய இலக்கணத்தை ஆராய்ந்து பல நூல்கள் வெளிவந்துள்ளன. ஆயினும் பல நூற்றாண்டுகளுக்கு முன் அதாவது சங்ககாலத்தில் தமிழில் இயற்றப்பட்ட இரண்டு நூல்களான சாத்தனாரின் கூத்தநூல், அறிவானாரின் பஞ்சமரபு ஆகிய நூல்களில் காணப்படும் ஆடல் செய்திகளைப்பற்றி பல்வேறு பரிணாமங்களில் ஆராய்ந்து வேற்றுமை, ஒற்றுமைகளையும் இலக்கணக் கூறுகளையும், ஒப்பிட்டு ஆராய்ந்து வெளிக்கொணர்வதே இந்தஆய்வின் நோக்கமாகும்.

## ஆய்வின் முன்னோடிகள்:

1. முனைவர். திருமதி. இலட்சுமி - இவர் சுவைநூலில், கூத்தநூலில் இழைகள் என்ற தலைப்பில் ஆய்வு செய்துள்ளார்.
2. புலவர். முனைவர் திரு. சே. இரகுராமன் - தாம் வெளியிட்ட ‘தமிழர் நடன வரலாறு’ என்னும் நூலில் கூத்தநூல் மற்றும் பஞ்சமரபின் நூல் அமைப்பினைப்பற்றிய கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

கூத்தநூலின் சுவை நூல், தொகைநூல் மற்றும் பஞ்சமரபின் நிருத்தமரபு, மற்றும் அவிநயமரபு என இரண்டு நூல்களின் நாட்டியக் கருத்துக்களை முழுமையாக ஆய்வு செய்து இரண்டு நூல்களின் உண்மைத்தன்மையை வெளிக்கொணரும் முயற்சியே இந்த ஆய்வாகும்.

## ஆய்வு எல்லை:

கூத்தநூலில் காணப்படும் நிருத்தம் மற்றும் அபிநய கூறுகளை ஆராய்ந்து, பஞ்சமரபில் நிருத்தமரபு, அவிநயமரபு மற்றும் தேவைக்கேற்ப பஞ்சமரபின் மற்றபகுதிகளான இசைமரபு, வாச்சியமரபு, மற்றும் தாளமரபில் இருந்தும் ஆய்வற்கான பகுதிகளைக் கண்டறிந்து ஆய்வுசெய்து இவற்றை கூத்தநூலுடன் ஒப்பிட்டு அவற்றின் ஒற்றுமை

மற்றும் வேற்றுமைகளை அறிந்து இவ்விரு நூல்களில் உள்ள சூத்திரங்களின் விளக்கத்தினை அனைவரும் புரிந்துகொள்ளும்படி எடுத்துரைத்து ஆடற்கூறுகளை வெளிக் கொணர்வதே ஆய்வின் எல்லையாகும்.

## ஆய்வேட்டின் அமைப்பு:(ஆய்வுப் பகுப்பு)

இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை நீங்களாக ஐந்து இயல்களாக பகுக்கப்பட்டுள்ளன.

**முன்னுரை**

**இயல் ஒன்று: கூத்தநூலில் அபிநயம் சார்ந்த கருத்துக்கள்,**

**இயல் இரண்டு: பஞ்சமரபு கூறும் அபிநய கருத்துக்கள்,**

**இயல் மூன்று: கூத்தநூலில் தாண்டவம் பற்றிய கருத்துக்கள்,**

**இயல் நான்கு: பஞ்சமரபில் நிருத்தம் பற்றிய கருத்துக்கள்,**

**இயல் ஐந்து: கூத்தநூல் பஞ்சமரபு - ஓர் ஒப்பீடு,**

**முடிவுரை.**

## இயல் ஒன்று:

### "கூத்தநூலில் அபிநயம் சார்ந்த கருத்துக்கள்".

ஆதிகாலமான மனிதஇனம் தோன்றிய காலத்தில் நாட்டியம் எவ்வாறு தோன்றியது என்பன பற்றியும், கூத்தநூலை இயற்றியவர் யார், அவர் இயற்றிய கூத்தநூலின் முதன்மைநூல் அதனை இயற்றியவர், மற்றும் எந்தெந்த நூலை சார்பு நூலாகவும், வழிநூலாகவும் கொண்டு தனது நூலை இயற்றினார் எனப்படும் செய்திகளுடன், கூத்தநூல் பற்றிய அகச்சான்றுகள் என்னும் தலைப்பில் விளக்கப்பட்டுள்ளன. கூத்தநூலின் பிரிவுகள் என்ற தலைப்பின் கீழ் கூத்தநூலின் ஒன்பது வகையான பிரிவுகள் அதன் பெயர்கள் அந்த நூல்களின் சாராம்சங்கள் விளக்கப்பட்டுள்ளன.

கூத்தநூலின் உட்பிரிவான சுவைநூலைப்பற்றிய செய்திகள் சுவைநூலில் காணப்படும் உட்பிரிகள் என்கின்ற தலைப்பின் கீழ் கடவுள் வாழ்த்தான பாயிரம் மற்றும் சுவைநூலின் உட்பிரிவுகள் எடுத்துச் சொல்லும் நாட்டியம் சாாந்த பகுதிகள் என நூற்றி ஐம்பத்தி மூன்று சூத்திரங்களைக் கொண்ட பதிமூன்று பிரிவுகள், தொகைநூலில் காணப்படும் நூற்றி அறுபத்தி இரண்டு சூத்திரங்களைக்கொண்ட அதன் உட்பிரிவுகள் கூறப்பட்டுள்ளன.

சுவைநூலில் நாட்டியத்தின் தோற்றம் என்ற தலைப்பில் நாட்டியம் தோன்றிய வரலாறு, சிவன் கையில் டமருகத்தினை வைத்துக்கொண்டு ஆடியதால் அந்த உடுக்கை ஒலியிலிருந்து ஓசை பிறந்ததாகவும், சுவைநூலில் ஓம் தோன்றிய வரலாறு என்கின்ற தலைப்பின் கீழ் உடுக்கை ஒலியிலிருந்து ஓம் தோன்றியது, மற்றும் தமிழ் எழுத்துக்கள், வடமொழிஎழுத்துக்கள் இரண்டும் தோன்றியதனை சாத்தனாரால் இயற்றப்பட்ட சூத்திரங்களின் மூலம் விளக்கிக்காட்டி தொகுக்கப்பட்டுள்ளன.

சுவைநூலில் பொதுநெறி என்ற தலைப்பில் சுவையின் தோற்றம், அதன்வழித் தோன்றிய மெய்ப்பாடுகளைப்பற்றிய செய்திகளைக் கொண்டு சுவைநூலில் மெய்ப்பாடு விவரிக்கப்பட்டு அதன் பின் கூத்தின் வகைகளை விரித்துக்கூறி சுவைநூல் பொதுஇயல் சுவைநெறியில் முதலில் தோன்றிய முக்குணங்கள் எவ்வாறு ஒன்பது குணங்களாக மாற்றம் அடைகின்றது என்பதனை விளக்கிக் கூறி சுவைநூல் இழைபற்றிய கருத்துக்களில் அகமானது, ஒன்பது சுவையாக மாறிய விதங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

சுவை நூலில் (வேத்தியல் சுவைநெறி) அமைதி, ஊக்கம், ஒடுக்கம், இச்சை, சினப்பு, குறுக்கம், மயக்கம், தேப்பம், திணக்கம் என்னும் ஒன்பது வகையான குணங்களின் தோற்றம், அதனின்று பிறந்த சுவைகள், அதனை அபிநயிக்கும் முறைகள் ஆய்வுசெய்யப்பட்டு மற்ற நூல்களின் அபிநயம் சாா்ந்த கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன. சுவையிலிருந்து தோன்றிய இழைகள் பற்றி இந்த இயலில் இடம்பெற்றுள்ளன.

## இயல் இரண்டு:

### "பஞ்சமரபு கூறும் அபிநய கருத்துக்கள்".

பஞ்சமரபு கூறும் அவிநயமரபில் நூலாசியர் பற்றிய செய்திகள், நூலின் அமைப்பு மற்றும் ஆசிரியர் வாழ்ந்த காலம், பஞ்சமரபின் ஐந்து வகையான பிரிவுகளான இசைமரபு, வாச்சிய மரபு, நிருத்த மரபு, அவிநய மரபு, தாளமரபு, பற்றியும் இதில் ஆய்விற்கான பகுதிகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

நாடகம், நிருத்தம், நிருத்தியம், என்ற தலைப்பில், நாட்டிய சாஸ்திரம், சிலப்பதிகாரம், அபிநயதர்ப்பணம் போன்ற நூல்களில் அபிநயம் பற்றிய விளக்கம், பரதசேனாதிபதீயம், மகாபரத சூடாமணி கூறும் அபிநயத்தின் பிரிவுகள் பற்றிய விளக்கம், பஞ்சமரபு கூறும் அவிநயமரபு என்னும் தலைப்பில் ஒற்றைக்கை முத்திரைகள் முப்பத்திமூன்று, அதன் பிரிவுகளான ஆண்கை, பெண்கை, அலிக்கை, பொதுக்கைகள், பற்றிய விளக்கம், இந்நூல் கூறும் பதினைந்து வகையான இரட்டைக்கை முத்திரைகள், இந்த இயலில் இடம் பெற்றுள்ளன.

மற்றும் பதினாறு வகையான அங்கக்கிரியைகள், பத்து வகையான தலையின் அசைவுகள், எட்டு விதமான கண்ணின் அசைவுகள், மூன்று விதமான கழுத்தின் அசைவுகள், பிற நாட்டிய நூல்களுடன் ஒப்பிட்டு விளக்கப்பட்டுள்ளன. கூத்திற்குரிய கால்களின் நிலைகளான தேசி, வடுகு, சிங்களம், என மூன்று நிலைகள், தேசிக்குறிய கால்கள், வடுகிற்கு உரிய கால்கள் உரிய எடுத்துக்காட்டுடன் விளக்கப்பட்டுள்ளன. இருபத்தி நான்கு வகையான தேசிக்குரிய கால்களும் பதினான்கு வடுகிற்குரிய கால்களும் எட்டுவகையான சிங்களக்கால்களும் இந்த இயலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஸ்தானங்கள் என்றழைக்கப்படும் ஆறு வகையான கால்களின் நிலைகள், கூத்திற்கான வினைகள், ஐந்து வகையான பாதத்தின்

செயல்பாடுகள், தேசி வடுகு மற்றும் சிங்களக்கால்களுக்கான கை முத்திரைகள் மற்றும் காலின் நிலைகள் இடம்பெற்றுள்ளன.

## இயல் மூன்று:

### "கூத்த நூலில் தாண்டவம் பற்றிய கருத்துக்கள்".

தாண்டவத்தின் விளக்கம், கூத்தநூலில் தாண்டவம், சக்தியின் கூத்து, முருகன் கூத்து பற்றி விளக்கி பின் கூத்தநூல் கூறும் தாண்டவ வகைகளின் கீழ் தாண்டவத்தின் வகைகளான அல்லியத்தாண்டவம், எல்லியத்தாண்டவம், பல்லியத்தாண்டவம், உள்ளத்தாண்டவம், நுதல்விழித்தாண்டவம், நுதல்கால் தாண்டவம், நோக்கத்தாண்டவம், நுணுக்கத்தாண்டவம், கால்வரித்தாண்டவம், களிற்றுஉரித்தாண்டவம், பேய்வரித்தாண்டவம், நச்சத்தாண்டவம் எனப் பன்னிரெண்டுவகையான தாண்டவங்களும், இத்தாண்டவங்கள் எந்தெந்த காலத்தில் ஆடப்பட்டது. இத்தாண்டவம் ஆடப்பட்டதன் காரணங்கள் மற்றும் இந்த தாண்டவத்தின் போது எந்தெந்த ஆஹார்யத்தினை தரித்து இறைவன் ஆடினான் என்பதற்கான விளக்கங்கள், இந்த இயலில் இடம்பெற்றுள்ளன.

இறைவனான சிவன் தனியாக ஆடியத்தாண்டவங்கள், சிவையுடன் சேர்ந்து மகிழ்ச்சியுடன் ஆடியத்தாண்டவங்கள், தனக்கு ஏற்பட்ட கோபத்தினால் தன் மூன்றாவது கண்ணாகிய நெற்றிக்கண்ணைத்திறந்து அதிலிருந்து வெளியேறிய தீயால் திரிபுரம் எரிக்க ஆடியத்தாண்டவம் தம் பக்தர்களைக் காக்க ஆடியத்தாண்டவங்கள், காளியின் ஆணவத்தினை அடக்க அவளுடன் போட்டிபோட்டுக்கொண்டு தன் காலை நெற்றிஅளவிற்கு தூக்கி ஆடியத்தாண்டவம், முனிவர்களுக்காக ஆடியத்தாண்டவம், சிவையுடன் ஆடிய தாண்டவங்கள், நுணுக்கமான நூற்றியெட்டு கரணங்களை விளக்குமிடத்து ஆடிய நுணுக்கத்தாண்டவம், தம் பக்தர்களை எமனிடம் இருந்து காப்பாற்ற எமனை விரட்ட ஆடியத் தாண்டவம், தம்மைக்கொல்ல வந்த புலி மற்றும் யானையை கொன்று அதன் தோலை உரித்:து ஆடையாக உடுத்திக்கொண்டு ஆடியத்தாண்டவம், சுடுகாட்டில் பேய்கள் மற்றும் பூதங்களுடன் சேர்ந்து ஆடியத்தாண்டவம், நஞ்சினை உண்ட மயக்கத்தினால் ஆடிய நச்சத்தாண்டவம், இத்தாண்டவங்களின் படிமங்களும், இப்படிமங்களின்

அமைப்பும், மேலும் இத்தாண்டவங்களில் இருந்துப்பிறந்த கூத்துக்களும் இந்தஇயலில் இடம் பெற்றுள்ளன.

## இயல் நான்கு:

### 'பஞ்சமரபில் நிருத்தம் பற்றிய கருத்துக்கள்.'

நிருத்தவகை மரபு அதன் வகைகளான தாண்டவம், நிருத்தம், நாட்டியம், குரவை, வரி, கோலம், வகைக்கூத்து விரித்துக் கூறப்பட்டுள்ளன. தாண்டவம் பற்றியும் அதன் வகைகளான பதினாறு வகை அகமார்க்கத்தாண்டவத்தினைப்பற்றியும், இதில் நிருத்தத்தின் வகையான தேசி, வடுகு, சிங்களம் பற்றியும், நாட்டியம் என்பதன் விளக்கம், அதன் வகைகள், குரவை என்பதன் விளக்கம், அதன் வகைகளை, சங்ககாலப் பாடல்களிலிருந்து விளக்கிக்காட்டுதல், வரி என்பதன் விளக்கம் அதன் எட்டுவிதமான வகைகள், கோலம் என்பதன் விளக்கம், வகைக்கூத்து என்று சொல்லப்படும் பதினொரு வகையான ஆடல்களான அல்லியம், கொடுக்கொட்டி, குடைக்கூத்து, குடக்கூத்து, பாண்டரங்கம், மல்லாடல், துடியாடல், கடையம், பேடாடல், மரக்காலாடல், பாவைக்கூத்து, முதலான ஆடல்களைப்பற்றியும் இந்த இயலில் தொகுத்துத்தரப்பட்டுள்ளன.

தாண்டவமரபு(தாண்டவ தாளமரபு) அகமார்க்கப்பொருள் ஜதி வரலாறு மரபு, அகமார்க்கப்பொருள் தரு வரலாறு மரபு, என மூன்று பகுதிகளிலும் உள்ள பதினாறுவகையான தாண்டவங்களான, ஆதித்தாண்டவம், அனுத்தாண்டவம், பிரகாசத் தாண்டவம், பீடத்தாண்டவம், புட்பாஞ்சலித்தாண்டவம், புயங்கத்தாண்டவம், தேசித்தாண்டவம், தேசியொத்துத் தாண்டவம், நீதித்தாண்டவம், நிழல்தாண்டவம், வைப்புத்தாண்டவம், வகுப்புத்தாண்டவம், வாக்கியத்தாண்டவம், கவுத்தவத்தாண்டவம், துணுக்குத்தாண்டவம், தெண்டபாதத்தாண்டவம், என்பன ஆய்விற்கு உட்படுத்தியது இந்த இயலில் இடம்பெற்றுள்ளன.

சிவன், திருவாலங்காட்டில் ஆடியத்தாண்டவங்கள் மற்றும் இத்தாண்டவங்கள் எந்தெந்த காரணங்களுக்காக ஆடப்பட்டது, உலக

உயிர்களின் உற்பத்திக்காக சூரியஒளியின் பிரகாசத்தில் உலக உயிர்களின் பசியைப் போக்கி உணவளித்து வாலையுடன் சேர்ந்து ஆடியத்தாண்டவம், மற்றும் தன் பக்தர்களைக் காலனிடம் இருந்து காப்பாற்றும் பொருட்டு நளின பாதத்தினால் காலனை உதைத்து ஆடியத்தாண்டவம், முனிவர்கள் தேவர்கள் புஷ்பத்தினால் அஞ்சலிசெய்ய ஆடியது, பாம்புகளைத் தரித்து ஆடியது, தேசி என்னும் நின்றாடும் நாட்டியத்தினை தோற்றுவிக்க ஆடியத்தாண்டவம், தேசியுடன் ஒத்து ஆடியத்தாண்டவம், உலகில் நீதியை நிலைநாட்டுவதற்காக ஆடியத்தாண்டவம், இராவணனுக்காக ஆடியத்தாண்டவம், நூற்றெட்டு கரணத்தினை உருவாக்க ஆடியத்தாண்டவம், 'தோதீந் தோந்தோ' என்னும் சொற்கட்டுகளுக்கு ஆடியத்தாண்டவம், பூதம், பேய், காளி, கடவுள், என வகுத்துக்காட்டி, திருவாலங்காட்டில் ஆடியத்தாண்டவம், கவித்துவமான நடனச்சொற்களுக்கு திருஆலாங்காட்டில் ஆடியத்தாண்டவம், தனது அடியார்களின் அச்சத்தினைப் போக்கும் பொருட்டு திருஆலாங்காட்டில் ஆடியத் தாண்டவம், சிலம்பினை அணிந்த பாதத்தினை உடைய சிவபிரான் தன்னுடைய கால்களில் அணிந்த தண்டமான சிலம்பானது 'தா தித்' என ஒலிக்க காளியுடன் வாதிட்டு திருஆலாங்காட்டில் ஆடும் தாண்டவமாகும். தாளங்களைப்பற்றிய பொதுவான விளக்கத்துடன், தாண்டவங்களின் பாடல்கள், அதன் ஜதி, மற்றும் அத்தாண்டவத்திற்கான தாளங்கள் இந்த இயலில் விரிவாக ஆய்வுசெய்யப்பட்டுள்ளன.

## இயல் ஐந்து:

### "கூத்தநூல் - பஞ்சமரபு - ஒப்பீடு."

இந்த இயலில் கூத்தநூல் மற்றும் பஞ்சமரபின் ஆசிரியர் குறிப்பு, நூல்களின் பெயர்க்காரணம், உரையாசிரியர்கள் மற்றும் நூல்வெளியீடு பற்றிய குறிப்புகள், இரண்டு நூல்களின் அமைப்புகள், இரண்டு நூல்களின் கடவுள் வாழ்த்துப் பகுதிகள், கூத்து பற்றிய சங்ககாலம் முதலான விளக்கங்கள், இரண்டு நூல்களிலும் அபிநயம் சார்ந்த கருத்துக்கள், அபிநயத்தின் பிரிவான ஆங்கீகா அபிநயம், வாசிகா அபிநயம், ஆஹார்ய அபிநயம், மற்றும் சாத்விக அபிநயம்

என்பனவற்றின் இருநூல்களின் ஒற்றுமை வேற்றுமைகள், மேலும் இரண்டு நூல்களிலும் இடம்பெற்றுள்ள ஒற்றுமைத்தன்மையுடன் கூடியத் தாண்டவங்களின் ஒப்பீடு, இரண்டு நூல்களிலும் கொடுக்கப்பட்டுள்ள வாயுக்களின் பிராணன் (வாயுக்கள்) ஒப்பீடு என்றவாறு இரண்டு நூல்களிலும் உள்ள ஒற்றுமையான மற்றும் வேற்றுமையான நாட்டியக் கூறுகள் ஒப்பிடப்பட்டுள்ளன.

## முடிவுரை:

இரண்டு நூல்களையும் ஆய்விற்குட்படுத்தியதன் மூலம் அறியப்பட்ட, நூலின் உட்கருத்துக்கள், இரண்டு நூல்களின் அமைப்புகள், இரு நூல்களிலும் நிருத்தம் சார்ந்த கருத்துக்கள், அபிநயம் சார்ந்த கருத்துக்கள், தாண்டவம் சார்ந்த கருத்துக்கள், வெளிக்கொணரப்பட்டுள்ளது. இரண்டு நூல்களிலும் உள்ள ஆங்கீக, வாசிக, ஆஹார்ய, சாத்வீக அபிநயங்களைப்பற்றிய ஆய்வானது பல செய்திகளை நாட்டிய உலகிற்கு எடுத்துச் சொல்கின்றது. இரு நூல்களிலும் உள்ள உண்மைக் கருத்துக்கள் ஒப்பீடு செய்யப்பட்டு மற்ற நாட்டிய நூல்களில் உள்ள கருத்துக்களுடன் துணையோடு இரண்டு நூல்களிலிருந்து அறியப்பட்ட ஒற்றுமையான மற்றும் வேற்றுமையான கருத்துக்கள் தொகுத்துத்தரப்பட்டுள்ளன.

ஆய்விற்கு பயன்பட்ட துணை நூற்பட்டியலும் இணைக்கப்பட்டுள்ளன. இரண்டு நூல்களிலும் உள்ள ஒரு சில நாட்டியக்கருத்துக்கள் பின்னிணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. கூத்தநூல் மற்றும் பஞ்சமரபில் காணப்படும் ஒரு சில பாடல்கள் ஸ்வர தாளக் குறியீட்டுடன் இசையமைக்கப்பட்டு பின்னிணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. தாண்டவங்களின் புகைப்படங்கள் பின்னிணைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.